DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : கிருஷ்ணசாமி | Father/Husband Name : மாடசாமி |
| Age : 57 | Village : சாத்தூர் |
| Taluk : | Calling : சிறப்பு சார்பு ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Jan 22, 2026 12:23 PM

(A2 present. A1 not present. Petition under Section 317 CrPC filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் சாத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணி செய்து வருகிறேன்.

2. நான் கடந்த 04.03.2017 ம் தேதி சாத்தூர் நகர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது 16.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு. சசிகுமார், சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.புகழேந்தி, த.கா.394 கார்மேகம் ஆகியோருடன் சாத்தூர் படந்தால் வைப்பாற்று பகுதியில் மணல் திருடுவது சம்பந்தமாக ரோந்து செய்து வந்த போது சாத்தூர் படந்தால், சக்தி மாரியம்மன் கோவில் அருகேயுள்ள வைப்பாற்றில் TN 67 P 6737 என்ற TVS XL என்ற இருசக்கர வாகனத்தில் முன்பகுதியில் மூன்று பிளாஸ்டிக் சாக்குபையில் மணலுடனும், பின் சீட் பகுதியில் இரண்டு பிளாஸ்டிக் சாக்கு பை மணலுடனும் வந்த நபரை விசாரித்த போது, அவர் சாத்தூர் ஆண்டாள் புரம் ரெங்கையா மகன் பவுன் ராஜ் என்றும், அவர் ஏற்கனவே பெயின்டிங் வேலை செய்து வந்ததாகவும், ஒரு வார காலமாக வேலை இல்லாததால் பாலமுருகன் என்பவரிடம் பேசிக்கொண்டு இருக்கும் போது வைப்பாற்று பகுதியிலிருந்து தனக்கு சொந்தமான மேலே கண்ட இருசக்கர வாகனத்தின் மூலம் சாத்தூர் தென்றல் நகர் ஏரியாவில் புதிதாக கட்டக்கூடிய கட்டிடத்திற்கு மணல் மூட்டைகளை கொடுத்தால் கூலி ரூ.50/- மற்றும் ஒவ்வொரு மூட்டைக்கு ரூ.75/- கொடுப்பார்கள் என்று சொன்னதின் பேரில் இரண்டு நாட்களாக பாலமுருகன் சொன்னதன் பேரில் செய்து வருவதாகவும் கூறினார்.

3. சக்தி மாரியம்மன் கோவில் அருகேயுள்ள வைப்பாற்று பகுதியில் எந்தவிதமான அனுமதியோ பெறாமல் அரசின் கனிம வளமான மணலை திருடி வந்த குற்றத்திற்காக பவுன்ராஜை 16.30 மணிக்கு கைது செய்து, சம்பவ இடத்தில் வைத்து TN 67 P 6737 என்ற TVS XL இருசக்கர வாகனம் மற்றும் 5 பிளாஸ்டிக் பையில் இருந்த மணல் ஆகியவற்றை அத்தாட்சி தயார் செய்து உதவி ஆய்வாளர் சசிகுமார் கைப்பற்றினார். தனிநபர் யாரும் சம்பவ இடத்தில் இல்லாததால் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.புகழேந்தியும், நானும் அத்தாட்சியில் சாட்சியாக கையொப்பம் செய்தோம். அதில் 1 வது எதிரி பவுன்ராஜூம் கையொப்பம் செய்தார். அத்தாட்சியில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சி தான் சம்பவ இடத்தில் வைத்து உதவி ஆய்வாளர் சசிகுமாரால் தயார் செய்யப்பட்டதாகும். **( கைப்பற்றுதல் அத்தாச்சி அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள TVS XL இருசக்கர வாகனம் சம்பவ இடத்தில் வைத்து கைப்பற்றப்பட்டதாகும். **(இரண்டு**

**புகைப்படங்கள் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. பின்னர் 17.30 மணிக்கு எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட TN 67 P 6737 என்ற TVS XL இருசக்கர வாகனம் மற்றும் 5 பிளாஸ்டிக் பையில் இருந்த மணலுடன் கூடிய இருசக்கர வாகனத்தை நிலையம் வந்து நிலைய குற்ற எண்.119/2017, பிரிவு 379 இதச மற்றும் 21(1) Mines and minerals Act ஆக வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக என்னை சார்பு ஆய்வாளர்கள் என்னை விசாரித்தார்கள். எதிரி பவுன்ராஜை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

5. சம்பவத் தேதியில் காவல் நிலைய பொது நாட்குறிப்பை பார்வையிட்டால் நாங்கள் ரோந்து பணிக்கு சென்ற விபரம் தெரியும் என்றால் சரிதான். எனக்கு என்ன பணி என்பதை காவல் நிலைய பொறுப்பு அதிகாரி தான் முடிவு செய்வார் என்றால் சரிதான். வழக்கு சம்பவத் தேதியில் எங்கள் காவல் நிலைய பொறுப்பு அதிகாரியாக உதவி ஆய்வாளர் சசிகுமார் இருந்தார். அத்தாட்ச்சியில் நாங்கள் யார் யார் எந்த வாகனத்தில் சம்பவ இடத்திற்கு சென்றோம் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள, என்னால் அடையாளம் காண்பிக்கப்பட்ட புகைப்படங்கள் (அ.சா.ஆ.2) எங்கள் காவல் நிலையத்தில் வைத்து எடுக்கப்பட்டதா, சம்பவ இடத்தில் வைத்து எடுக்கப்பட்டதா? 1வது எதிரியை கைது செய்ததாக கூறப்படும் சக்தி மாரியம்மன் கோவில் அருகே வைத்து எடுக்கப்பட்டதா என்றால் புகைப்படங்கள் காவல் நிலையத்தில் வைத்து எடுக்கப்பட்டவை ஆகும், ஆனால் எதிரியை கைது செய்த இடத்தில் வைத்து புகைப்படம் எடுத்தோம், அது இந்த வழக்கு கோப்பில் இல்லை.

6. இந்த வழக்கில் தயார் செய்யப்பட்டுள்ள அத்தாச்சியில் 16 30 மணிக்கு சம்பவ இடத்தில் வைத்து எதிரி பவுன்ராஜை கைது செய்து, TN 67 P 6737 என்ற TVS XL இருசக்கர வாகனம், மணலுடன் கூடிய பிளாஸ்டிக் பைகளை கைப்பற்றி, அத்தாட்சி தயார் செய்து, அங்கு தனி நபர்கள் யாரும் இல்லாததால் சிறப்பு உதவி ஆய்வாளர் புகழேந்தி மற்றும் நான் ஆகிய இருவரும் சாட்சியாக கையொப்பம் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் வைத்து எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் இருசக்கர வாகனத்தின் நிறம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கைப்பற்ற வாகனம் யாருக்கு சொந்தமானது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான், எதிரி பவுன்ராஜ் அந்த இருசக்கர வாகனத்தை அவருக்கு ஆஜர் எதிரி பாலமுருகன் கொடுத்ததாக கூறினார். கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் பிளாஸ்டிக் பை என்ன நிறம், எவ்வளவு கொள்ளளவு கொண்டது மற்றும் அதில் எவ்வளவு மணல் இருந்தது போன்ற விபரங்கள் அத்தாட்சியில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு கோப்பில் உள்ள புகைப்படத்தில் மணல் மூட்டைகள் காணப்படவில்லை என்றால் சரிதான்.

7. 1வது எதிரியை கைது செய்ததாக கூறும் இடத்திலிருந்து தென்றல் நகர் சுமார் 500 மீட்டர் தொலைவில் இருக்கிறது என்றால் சரிதான். 1வது எதிரியை நாங்கள் விசாரித்த போது இரண்டாவது எதிரி பாலமுருகன் கூறியதன் அடிப்படையில் அவர் கடந்த இரண்டு நாட்களாக தென்றல் நகரில் கட்டி வரும் ஒரு வீட்டில் மணலை வைத்துக் கொண்டு இருந்ததாக சொன்னதாக கூறியுள்ள நிலையில் நாங்கள் அந்த இடத்திற்கு சென்று பார்த்தோமா என்றால் நான் செல்லவில்லை, உதவி ஆய்வாளர் சசிகுமார்

சென்றாரா என்று எனக்கு தெரியாது. கடந்த இரண்டு நாட்களாக எதிரி மணலை திருடி சென்றதாக கூறியதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அவர் அந்த இரண்டு நாட்களில் எவ்வளவு மணலை திருடினார் என்பது தொடர்பாக அத்தாட்ச்சியில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

8. பொதுவாக திருட்டு வழக்குகளில் உடன் குற்றவாளியை சேர்ப்பதற்கு ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்வார்கள் என்றால் சரிதான், அத்தாச்சி தயார் செய்வது மூலமாகவும் அதை பதிவு செய்யலாம். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் அத்தாட்சி தயார் செய்ய முடியும் என்றால் அத்தாட்சி மூலமும் கைப்பற்றலாம். ஒவ்வொரு சாக்கிலும் எவ்வளவு மணல் இருந்தது என்பது குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 1 வது எதிரியை கைது செய்ததாக கூறும் இடத்திலிருந்து படந்தால் கிராமம் சுமார் 50 மீட்டர் தொலைவில் இருக்கிறது என்றால் 100 மீட்டர் தொலைவில் இருக்கிறது. அது பகல் நேரத்தில் மக்கள் நடமாட்டம் இருக்கக்கூடிய பகுதி என்றால் நாங்கள் எதிரியை கைது செய்த நேரத்தில் மக்கள் நடமாட்டம் இல்லை.

9. திருடப்பட்டதாக கூறும் இடம் வைப்பாற்றில் இருந்து தான் திருடப்பட்டது என்று கூற முடியாது என்றால் பவுன்ராஜ் எங்களிடம் அவர் மணலை திருடிய இடத்தை காண்பித்தார், நாங்கள் அங்கு சென்று பார்த்தபோது மணல் திருடியதற்கான தடம் இருந்தது. அதை புகைப்படம் எடுத்தோமா என்றால் உதவி ஆய்வாளர் சசிகுமார் அதை புகைப்படம் எடுத்தார். சம்பவ இடத்திலோ அல்லது ஒன்றாவது எதிரி கைது செய்யப்பட்ட இடத்திலே வைத்து அத்தாட்சி தயார் செய்யவில்லை என்றாலும், அந்த இடத்தில் வைத்து நான் அதில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. இரண்டாவது எதிரி பாலமுருகனுக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் மற்றும் சொன்ன இடத்தில் வைத்து அத்தாட்சி தயார் செய்யப்பட்டு, அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை என்றாலும், அத்தாட்சி காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டு காவல் நிலையத்தில் வைத்து தான் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.

10. நான் சொல்வது போல் 1, 2 எதிரிகளுக்கும் இந்த வழக்கில் தயார் செய்யப்பட்டுள்ள அத்தாட்சிக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Jan 22, 2026 12:56 PM

Judicial Magistrate 2, Sattur